மூங் கூடுமிடத்துப் பொருநையாற்றின் வடகரையில் எனது அழகிய கூத்தினை நானே உனக்குக்காட்டுவேன் காண்பாயாக; நீ விரும்பியன யாவும் இச்சிஞ்சாவனத்திற் பெறுகுவை; அவ்விடம் நோக்கி விரைந்து சென்று எமை அருச்சனை புரிவாயாக" என அருள் மொழி பகர்ந்து மறைந்தனன்.

அக்கினி தேவனும் அவ்வாறு தென்திசை நோக்கிச் சென்று அத்தலத்தின் அண்மையில் தன் பெயரானே ஒரு தீர்த்தமும், மேற்கு நோக்கிய இலிங்கமும், வடபால் அகிலாண்ட நாயகியும் பதிட்டை செய்து பூசித்தான். பின்னர் விரையப் போந்து பொருநை நதியையடைந்து நீராடி உச்சி வேளையில் தனது ஆன்மார்த்த இட்டலிங்கத்தினை ஆற்றின் வடகரையிலிருந்து பூசை செய்யலுற்றனன். அப்போது நிலம், நீர், காற்று, வான், ஞாயிறு, திங்கள் இயமானனாகிய எழுவரும் தந்தம் வடிவங்களிற் சூழ்ந்து நின்றனர். அப்போது சிவபெருமான் அன்னோர்க்குத் தமது எழில் நடங் காட்டத் திருவுளங்கொண்டு அக்கினித் தேவனின் பூசைப் பெட்டகக் கோயிலில் உள்ள இலிங்கத்தினின்றும் திருநடனத் திருக்கோலத்தில் எழுந்தருளி அழகிய ஆடல் காட்டியருளினன். எழில் நடங் கண்ட எண்மரும் உள்ளங் களி கூர்ந்து திருக்கூத்தமுதம் பருகி, ஆராவகை தொழுது ஆர்ந்தனர். அரனும் அக்கினியைத் தனக்கோர் வடிவமாகக் கொண்டு அருள் புரிந்தான். அக்கினி தேவனும் வடமொழியில் தோத்திரப்பாமாலை பாடிப் புகழ்ந்து போற்றினன். இப்பாமாலை, பாடவல்லார்க்குப் பலப்பல பேறுகளும் தரவல்லது. இப்பாமாலை வடமொழியிலும் தமிழாக்கமும் பின்னர்ச் சேர்க்கப் பட்டுள்ளது.

1. அக்கினிதேவற்கு அழகிய கூத்துக் காட்டிய சருக்கம்

அக்கினிதேவன் முதற் கிருதயுகத்தில் சிஞ்சாவனத்துத் திருக்கோயில் கொண்டருளிய கயிலாயநாதனை இடையறாது சிந்தித்து வழிபட்டு வந்தான். இவ்வழிபாட்டின் பயனைக் கயிலாயநாதனது நெற்றிக் கண்ணை விளங்கும் பேறுபெற்றான். இப்பேறு பெற்றது முதல் சிவபெருமானின் அழகிய திருக்கூத்துக்காணும் விருப்ப மிக்குடையனாய் நாடோறும் சித்திரா நதியிலுள்ள காமதேனு தீர்த்தத்தில் நீராடிக் கைலாயநாதன் கழலடி பூசித்து வந்தான். தன்னோக்கம் நிறைவேற, இறையருள் நாடி, மாசித்திங்களில் முப்பொழுதும் சிறப்பு வழிபாடு செய்து கயிலை ஈசன் திருமுன் திருவைந்தெழுத்தை விதிப்படி அறிவாற் கணித்து அருச்சித்து வந்தான். அக்கினிதேவனின் அருந்தவத்திற் கிரங்கி யருளிய சிவபெருமான், விடையேறும் பெருமானாக விண்ணிற் றோன்றி "அக்கினி தேவனே! நீ வேண்டும் வரம் யாது?" என வினவினான். அக்கினி தேவன் பணிந்து போற்றி "அடியார் வேண்டிற்றருளும் விண்ணவர் கோவே பேறெல்லாந்தந்தருளும் நுமது அழகிய கூத்துக்காணும் அவாமிக்குள்ளேன்; அடியேற்கு அருள் புரிய வேண்டும். இன்னும் ஒன்றுண்டு விண்ணப்பம், அடியேனது அக்கினி வடிவத்தினையும், நுமக்கு ஒரு வடிவாகக்கொண்டு அடியேற்கு நுமது அட்டமூர்த்தத்துள்ளொன்றாகும் ஆங்கப் பேறும் அருள் புரிய வேண்டும் என வரங்கள் இரண்டுங் கேட்டு வணங்கி நின்றான்.

அக்கினி பகவனுக்கு ஆதிபகவன் அருள் புரிந்து, "இதற்குத்தெற்கும் இன்னும் ஒரு யோசனை தூரம் சிஞ்சாவனமேயாகும் அங்கு இச்சிஞ்சாவனமும் தாருகவன

வெளியீடு எண் 3

உ

திருச்சிற்றம்பலம்

செப்பறைத் தலபுராணம்



வெளியிடுவோர்:

இராசவல்லிபுரம் திருவள்ளுவர் மடம்
சைவசமயப் பிரசங்க அபிவிருத்தி வகையறாத்
தருமங்களின் கமிட்டியார்கள்



இம்பீரியல் அச்சகம், திருநெல்வேலி.

உலகத்து இந்நாளில் வெளியிடச் செய்ததற்கு. திருவள்ளுவர் மடத்தின் முன்னாள் ஆதி டிரஸ்டி என்ற முறையில் நான் மிகவும் ஆனந்தமடைவதுடன் இப்பணி புரிந்த அழகிய கூத்தக் குருக்களையா அவர்களுக்கும், திருவள்ளுவர் மட ஏனைய டிரஸ்டிகளுக்கும் என் மனமுவந்த நன்றியினைச் செலுத்துகிறேன். இந்நூலில் திருநெல்வேலி, செப்பறை மணப்படை, கங்கைகொண்டான் முதலிய தலங்களின் வரலாறுகளும் ஓரளவு இடம் பெற்றுள்ளன. 'தல அமைப்பும் இக்கால் வழிபாடும்' என்ற தலைப்பிற்காணும் பொருள்கள் நாம் யாவரும் நேரில் கண்டும் கேட்டும் அறிந்தவையாதலின் இந்நூலினை இக்காட் புராணம் என்றே சொல்லலாம். இந்நூல் வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கு பெரிதும் பயன்படும். இந்நூல் எளிய நடையில் எழுதப்பெற்றமையின் யாவர்க்கும் பயன்படும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

S. நெல்லையப்ப பிள்ளை
திருவள்ளுவர் மடம் முன்னாள் பரம்பரை டிரஸ்டி
திருநெல்வேலி

திருவள்ளுவர் மடம் இந்நாள் டிரஸ்டிகள்

1) திரு அழகியகூத்தக் குருக்கள்,
செப்பறைமடாதிபதி
2) ,, A. பிரமநாயகம் பிள்ளை அவர்கள்
3) ,, C. சுந்தரம் பிள்ளை அவர்கள்
4) ,, T. S. சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள்
5) ,,

ஸ்ரீ மஹா கணபதி ஸஹாயம்

ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பிகா ஸமேத ஸ்ரீ கைலாஸநாத ஸ்வாமி ஸஹாயம்

ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பிகா ஸமேத ஸ்ரீ கைலாசநாத ஸ்வாமி திருக்கோவில்

கங்கைகொண்டான், திருநெல்வேலி மாவட்டம்

ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பாள் நூதன பிம்ப பிரதிஷ்டா அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பத்திரிக்கை

திருநெல்வேலி மாவட்டம், சித்ரா நதியின் தென் பகுதியில் கங்கைகொண்டான என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பாள் ஸமேத ஸ்ரீ கைலாஸநாத ஸ்வாமி திருக்கோவிலின் சிறப்பை "சிவபெருமான் அகஸ்திய முனிவருக்கு" சொல்லும் பொழுது, திருநெல்வேலி ஸ்தலம் (வேணுவனம்) சூரியன் என்னை பூஜை செய்து வலது கண்ணாக இருக்கும் அருளை பெற்றான். குற்றாலம் (செம்பகா வனம்) சந்திரன் என்னை பூஜை செய்து இடது கண்ணாக இருக்கும் அருளை பெற்றான், கங்கைகொண்டான் (திந்திரிணி வனம்) அக்னி தேவன் என்னை பூஜை செய்து நெற்றிக் கண்ணாக இருக்கும் அருளைப் பெற்றான். இத்தகைய பெருமை வாய்ந்த கங்கைகொண்டான் என்னும் இத்தலமும், மற்ற இரு ஸ்தலங்களும், எனக்கு கைலாச பர்வதத்தைவிட மிகவும் பிடித்தமானவை என்று சொன்னார். இத்துணை பெருமை வாய்ந்த இத்தலம் கங்கைகொண்டான் என்றும், சதுர்வேதி மங்கலம் என்றும் அழைக்கப்படுகிறது. இன்னும் எண்ணற்ற பெருமைகளும் உடையது

இத்தகைய பெருமை வாய்ந்த இத்திருக் கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பாள் நூதன பிம்பத்திற்கு, நிகழும் மங்களகரமான 1167-ம் ஆண்டு ஆவணி மீ 24ம் தேதி (9—9—92) புதன்கிழமையும், திரயோதசி திதியும், திருவோண நக்ஷத்ரமும் கூடிய சுபதினத்தில் காலை மணி 6-45க்கு மேல் 7-15க்குள் கன்யா லக்னத்தில் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

பக்தர்கள் எல்லோரும் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளபடி பூஜைகளில் கலந்துகொண்டு ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பிகா ஸமேத ஸ்ரீ கைலாசநாத ஸ்வாமியின் அருட் பிரஸாதத்திற்கு பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இப்படிக்கு

[illegible]

ஆங்கில தேதி	தமிழ் தேதி	கிழமை	நேரம்	நிகழ்ச்சி நிரல்
09—09—92	ஆவணி மீ 24 உ	புதன்	அதிகாலை	யாகசாலை பூஜை, ஸ்பர்ஸாஹுதி, மஹா பூர்ணாஹுதி, தீபாராதனை, யாத்ராதானம் வகையறா
			காலை 6-00 மணி	கும்பம் எழுந்தருளல்
			காலை 6-45க்கு மேல் 7-15க்குள்	கன்யா லக்னமும், திருவோண நக்ஷத்திரமும் கூடிய சுபவேளையில் ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்
			8-00 மணிக்கு	யஜமானர் உத்ஸவம்
			9-30 மணிக்கு	மஹாபிஷேகம் ஆரம்பம்
			மாலை 6-00 மணிக்கு	விசேஷ அலங்காரம்
			இரவு 7-00 மணி	திருக்கல்யாணம்
			7-30 மணி	தீபாராதனை
			8-00 மணி	ஸ்வாமி, அம்பாள் எழுந்தருளல் (கோவில் உள் பிரஹாரம்)

குறிப்பு: ஆவணி மீ 25ம் உ (10—09—92) வியாழக்கிழமை முதல் ஐப்பசி மீ 4ம் உ (20—10—92) செவ்வாய்க்கிழமை முடிய மண்டல பூஜை நடைபெறும்.

சுபம்

பழனியப்பா, நெல்லை-1. போன்: 25998

நிகழ்ச்சி நிரல்

ஆங்கில தேதி	தமிழ் தேதி	கிழமை	நேரம்	நிகழ்ச்சி நிரல்
06—09—1999	ஆவணி மீ 21 உ	ஞாயிறு	அதிகாலை 4-30 மணி முதல்	அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, கணபதி ஹோமம், அபிஷேகம், அலங்காரம்
			காலை 7-00 மணிக்கு	தீபாராதனை
			7-30 மணிக்கு	நவக்கிரக ஹோமம்
			8-30 மணிக்கு	தீபாராதனை
			9-00 மணிக்கு	ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பாள் நூதன பிம்பத்திற்கு தான்யாதி வாஸம், ஜலாதி வாஸம், புஷ்பாதி வாஸம், ஸயனாதி வாஸம்
			மாலை 3-00 மணிக்கு	வாஸ்து சாந்தி, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம்
			6-00 மணிக்கு	யஜமான வர்ணம், ஆச்சார்ய வர்ணம் ரக்ஷாபந்தனம் முதலியன
			இரவு 7-00 மணிக்கு	கடஸ்தாபனம், யாகசாலை பிரவேசம், யாகசாலை பூஜை, தீபாராதனை முதலியன.
			இரவு 10-00 மணிக்கு	பூஜை ஆரம்பம், (ரத்ன நியாஸம்
			10-20க்கு மேல் சுக்ர ஹோரையில் விருஷப லக்னத்தில்	யந்திர ஸ்தாபனம், பிம்ப பிரதிஷ்டை, அஷ்டபந்தனம், பிம்ப ஸித்தி, பிம்ப ரக்ஷா பந்தனம்
07—09—[illegible]	ஆவணி மீ 22 உ	திங்கள்	காலை 7-00 மணி முதல் 10-00 ,, முடிய	விசேஷ சந்தி, யாகசாலை பூஜை ஹோமம், பூர்ணாஹுதி தீபாராதனை முதலியன
			மாலை 5-00 மணிக்கு	விசேஷ சந்தி, யாகசாலை பூஜை ஹோமம்
			இரவு 7-30 மணிக்கு	பூர்ணாஹுதி, தீபாராதனை
[illegible]—09—[illegible]	ஆவணி மீ 23 உ	செவ்வாய்	காலை 7-00 மணி முதல் 10-00 ,, முடிய	விசேஷ சந்தி, யாகசாலை பூஜை ஹோமம் பூர்ணாஹுதி, தீபாராதனை
			மாலை 5-00 மணி முதல் 7-30 மணிக்கு	விசேஷ சந்தி, யாகசாலை பூஜை ஹோமம் பூர்ணாஹுதி, தீபாராதனை

-தாகத் தெரியவருகிறது. இந்த கும்பாபிசேகம் 1873ம் ஆண்டு நடைபெற்று

கோவில்பட்டியிலிருந்து திருநெல்வேலி செல்லும் நெடுஞ்சாலையில் சிற்றுக்-கரையில் பெரிய ராஜகோபுரத்துடன் கண்ணைக்கவரும் தோற்றமளிக்கும் இவ்வாலயம் சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ளதாகும். கோபுர அஸ்திவாரம் கணக்கிடத்து சுமார் 83 அடி உயரமுள்ள கோபுரம் கட்ட முற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

திருச்சிறி வனமாக இருந்த இடத்தில் மேய்க்கப்பட்டு வந்த பசுக்கூட்டங்-களில் ஒரு பசு ஓர் புளியமரத்தினடியில் நித்தமும் பால் சொரிவதைக் கண்ட மேய்ப்போன் அப்போதைய மன்னர் மகப்படைக்கு சீவலபாண்டியனிடம் கூற பாண்டிய மன்னர் வந்து பார்க்க மரத்தினடியில் ஓர் புற்றில் சிவலிங்கம் இருக்கக் கண்டு, கோயிலெடுக்கக்கருதி அம்மரத்தை வெட்ட முற்பட, அசரீரி தோன்றி "நாம் குடியிருந்த மரத்தினை வெட்டவேண்டாம். நாமிருக்கும் இடத்திற்கு நாம் செல்வோமெனக்" கூறியது. சிவலிங்கமும் தானே நடந்து 60 கெஜதூரம் விலகிச் சென்று நின்றது. எனவே ஸ்ரீகைலாசநாதருக்கு நடலிங்கம் எனவொரு திருநாமம் உண்டு. இன்றும் ஸ்தல விருக்ஷமான அப்புளிய மரத்திற்கு சமீபத்திலுள்ள தூண் ஒன்றில் மாட்டைக் காணாமல் கவலையுடன், தலையில் பொதிசோறு, கையில் கோலுடன் மேய்ப்போனைக் காணலாம்.

ஸ்ரீஆனந்தவல்லி அம்பாள் கங்கைகொண்டான் கிராமம் மேலவீதியில் அவதரித்து தனது ஒன்பதாவது வயதில் ஆலயத்தில் சுவாமியுடன் ஐக்கியமானதாகக் கர்ணபரம்-பரையாகக் கூறப்படுகிறது. அம்பாள் தபசுக்கு செல்லும்போது தனது பிறந்த * வீட்டில் இறங்கி அங்களிக்கப்படும் சீர்வரிசைகள் பெற்றுச்செல்வது இன்றும்வழக்கத்தில் உள்ளது.

இத்திருக்கோயிலின் தனிச்சிறப்பு நித்தமும் சுவாமியையும் அம்பாளையும் அதிகாலையில் சூரியன் தனது சாயைகளுடன் செய்யும் சூரிய வழிபாடாகும். கிழக்கு நோக்கி தனித்தனியே அமைந்துள்ள சந்நிதிகளில் அதிகாலையில் சூரியன் உதிக்கும் போது ஸ்ரீஆனந்தவல்லி ஸ்ரீகைலாசநாதசுவாமி மூர்த்தங்களின் மீது சூரிய ஒளிபட்டு சூரிய பூஜை நடைபெறுகிறது. ஆண்டுமுழுவதும் இவ்வாறு சூரியவழிபாடு நடைபெறுவது வேறெங்கும் இல்லையெனக்கூறலாம்.

விசுவரூப தெரிசனம் காட்டியருளிய ஸ்ரீவாமதேவமகரிஷி நவக்கிரகாதி

...விரதம்(நோன்பு) இருந்தாள். ஒருதினம் கோமதி அம்பிகை அப்பெண்ணின் ...நயினார்கோவில், ஸ்ரீகோமதிஅம்பாள் கனவில் தோன்றி "உனது ஊரில் என் தங்கை ஆனந்தவல்லி இருக்க, நீ ஏன் இங்கு வந்தாய்? போ, அவளிடமே போய்க்கேள்" என்று தெரிவிக்க, அப்பெண் கங்கைகொண்டான் மீண்டு ஸ்ரீஆனந்தவல்லி அம்பாள் அருளால் கரு வரப்பெற்றாள். அவ்வம்மையார் செய்து கொடுத்த ஊஞ்சலே இன்று பள்ளியறையில் உள்ளதென்பர். ஊஞ்சலில் ஸ்ரீசக்கர வெள்ளித்தகடுபதித்த ஆசனமொன்றும் உண்டு.

ஸ்ரீஆனந்தவல்லி அம்பாள் சந்நிதியில் மகாமண்டபத்தில் அமைந்துள்ள ஸ்ரீசக்ர பீடத்திலமர்ந்து அம்பாள் தெரிசனத்துக்கு நோன்பிருந்தவர்களுக்கு கேட்டவரம், குறிப்பாக குழந்தையில்லாத பெண்டிருக்கு மகப்பேறு சித்திக்கும் என்பது அனுபவ பூர்வமான உண்மையாகும். இதேபோன்ற பீடம்சங்கரநயினார்கோயில் ஸ்ரீகோமதியம்பாளின் சந்நிதியிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இங்கு மனநோயுற்றவர்கள் அமர்ந்து நோன்பிருந்து குணமடைந்தோர் ஏராளம்.

கடம்பூருக்கு தெற்கே ஓமாக்குளம்என்றொரு கிராமம் இருக்கிறது. இக்கிராமத்தில் ஜமீன்தாரணியாக இருந்த கம்மவார்நாயக்கர் இனத்தைச் சார்ந்த ஓயமாதேவி என்ற அம்மையார் தனது தீராதவயிற்றுநோயைத் தீர்த்தருளிய ஸ்ரீஆனந்தவல்லிக்கு அக்கிராமத்தையே தானமாகச் சாசனம் செய்வித்தார். ஆலயத்திலிருந்தே கிராமமுன்சீப், கர்ணம், தலையாரி நியமித்து வரிவசூலித்து நிர்வகித்து வந்துள்ளனர்.



(மேற்கண்ட வரலாறு சங்கரன்கோவில் அருள்மிகு சங்கரநாராயணசுவாமி தேவஸ்தானத்தின் உபகோவிலாக கங்கைகொண்டான் அருள்மிகு கைலாசநாத சுவாமிதிருக்கோவில் இணைக்கப்பட்டபோது (1977ம் ஆண்டு) வெளியிடப்பட்டது)

இக்காமதேனு தீர்த்தக்கட்டத்தில் தீர்த்தமாடி ஸ்ரீகைலாசநாதரைத் தெரிசித்தால் மூவர் செய்த பாவமெல்லாம் தொலையும்.

அக்கினிதேவர் தமது பெயரால் தீர்த்தமொன்று கண்டு ஸ்ரீகைலாசநாதரை வழிபட்டு உய்வு பெற்றார். இத்தீர்த்தம் ஸ்ரீசிவகாமியம்மாள் சன்னதிக்கு நடுவில் உள்ளது. அக்கினிதேவர் புகழ் அமைந்துள்ளது. அக்னி தேவருக்கு உற்சவ மூர்த்தம் உள்ளது. அக்கினிதேவர் முக்திப் பெற்ற விழாவும் நடைபெற்று வருகிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் முக்திப் பேறடைந்த திருப்புகலூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் ஆலயத்தைத் தவிர வேறெங்கும் இதுபோன்ற அக்னிதேவருக்கு உற்சவர் இருப்பதாகத் தெரியவில்லை.

ஸ்ரீசுவாமி கைலாசநாதர் முன்பு செம்பாலான நந்தி ஒன்று பிரதிஷ்டையாகி இருப்பதும் இத்திருக்கோயில் தனிச்சிறப்பு.

இத்திருக்கோயிலுள்ள சுரதேவருக்கு வெந்நீர் அபிசேகம் செய்வித்தால், எந்த சுரமும் நீங்கிவிடும். ஸ்ரீசுவாமி சந்நதியில் வைக்கப்பட்டுள்ள உரலில் திருமஞ்சன திரவியத்திற்குத் தேவையான பொருட்களைக்கொண்டு வந்து திரவியப்பொடி இடித்து வைப்பதும், அம்பாள் சந்நதியில் வைக்கப்பட்டுள்ள அம்மியில் மஞ்சள் கொண்டு வந்து அரைத்து வைப்பதும் மகளிருக்கு மாங்கல்ய பலத்திற்கு இக்கோயிலில் ஏற்பட்டுள்ள பிரார்த்தனைகள். இந்நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதால் பெண்களுக்கு விரைவில் திருமணம் நடந்தேறுகிறது.

மணப்படைவீட்டை ஆட்சிபுரிந்த சீவலப்பாண்டியன் காலத்தில் கட்டப்பட்ட இவ்வாலயத்தில் ராஜராஜசோழதேவர், ராஜேந்திரசோழன், பிற்காலப்பாண்டியர்கள் கல்வெட்டுக்கள் ஏராளமாக உள்ளன. 1895ம் ஆண்டிலேயே தொல்பொருள் ஆய்வுத் துறையினர் இவைகளை நகலெடுத்துள்ளனர்.

ராஜேந்திரனை பெற்றெடுத்தபின்னர் கங்கைகொண்ட சோழசதுர்வேதி மங்கலம் எனப்பெயரிட்டு சிறப்புமிக்க பதியாக விளங்கியுள்ளது இது.

இக்ஷேத்திரம் முன்னரே இவ்விரு கோவில்களுக்கும் தொடர்புடைய வரலாறு ஒன்றும் உண்டு. கங்கைகொண்டானைச் சேர்ந்த குழந்தைப்பேறற்ற பிராமணப் பெண் ஒருத்தி தன் குறை போக்குமாறு சங்கரநயினார்கோயில், ஸ்ரீகோமதிஅம்பாள் சன்னதியில் விரதம் (நோன்பு) இருந்தாள். ஒருநாள் கோமதி அம்பிகை அப்பெண்ணின் கனவில் தோன்றி "உனது ஊரில் என் தங்கை ஆனந்தவல்லி இருக்க, நீ ஏன் இங்கு வந்தாய்? போ, அவளிடமே போய்க்கேள்" என்று தெரிவிக்க, அப்பெண் கங்கைகொண்டான் மீண்டு ஸ்ரீஆனந்தவல்லி அம்பாள் அருளால் கருவுறப்பெற்றாள். அவ்வம்மையார் செய்து கொடுத்த மஞ்சமே இன்று பள்ளியறையில் உள்ளதென்பர். அதில் ஸ்ரீசக்கர வெள்ளித்தகடுபதித்த ஆசனமொன்றுமுண்டு.

ஸ்ரீஆனந்தவல்லி அம்பாள் சந்நதியில் மகாமண்டபத்தில் அமைந்துள்ள ஸ்ரீசக்ர பீடத்திலமர்ந்து அம்பாள் தெரிசனங்கண்டு நோன்பிருந்தவர்களுக்கு கேட்டவரம், குறிப்பாக குழந்தையில்லாத பெண்டிருக்கு மகப்பேறு கிட்டிக்கும் என்பது அனுபவ பூர்வமான உண்மையாகும். இதுபோன்ற பீடம் சங்கரநயினார்கோயில் ஸ்ரீகோமதி அம்பாளின் சன்னதியிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இங்கு மனநோயுற்றவர்கள் அமர்ந்து நோன்பிருந்து குணமடைந்தோர் ஏராளம்.

கடம்பூருக்கு தெற்கே ஓமாக்குளம் என்றொரு கிராமம் இருக்கிறது. இக் கிராமத்தில் ஜமீந்தாரணியாக இருந்த கம்மவார்நாயக்கர் இனத்தைச் சார்ந்த ஓமாதேவி என்ற அம்மையார் தனது தீராதவயிற்றுநோயைத் தீர்த்தருளிய ஸ்ரீஆனந்தவல்லிக்கு அக்கிராமத்தையே தானமாகச் சாசனம் செய்வித்தார். ஆலயத்திலிருந்தே கிராமமுன்சீப், கர்ணம், தலையாரி நியமித்து வரிவசூலித்து நிர்வகித்து வந்துள்ளனர்.

* (பெருங்கா. வரலாறு சங்கரன்கோயில் அருள்மிகு சங்கரநாராயணசுவாமி தேவஸ்தானத்தின் துணைக்கோயிலாக கங்கைகொண்டான் அருள்மிகு கைலாசநாத சுவாமிதிருக்கோயில் இணைக்கப்பட்டபோது (1977ம் ஆண்டு) வெளியிடப்பட்டது)

இக்காமதேனு தீர்த்தக்கட்டத்தில் தீர்த்தமாடி ஸ்ரீகைலாசநாதரைத் தெரிசித்து வந்தால் முன்னர் செய்த பாவமெல்லாம் தொலையும்.

அக்னிதேவர் தமது பெயரால் தீர்த்தமொன்று கண்டு ஸ்ரீகைலாசநாதரை வழிபட்டு உய்வு பெற்றார். இத்தீர்த்தம் ஸ்ரீசுவாமிஅம்மாள் சன்னதிகளுக்குநடுவில் அமைந்துள்ளது. அக்னி தேவருக்கு உற்சவ மூர்த்தம் உள்ளது. அக்னிதேவர் பூசை என்ற விழாவும் நடைபெற்று வந்துள்ளது. திருநாவுக்கரசு சுவாமிகள் முக்திப் பேறடைந்த திருப்புகலூர் ஸ்ரீஅக்னீஸ்வரர் ஆலயத்திலன்றி வேறெங்கும் இதுபோன்ற அக்னிதேவருக்கு உற்சவர் இருப்பதாகத் தெரியவில்லை.

சுவாமி கைலாசநாதர் முன்பு செம்பாலான நந்தி ஒன்று பிரதிஷ்டையாகி இருப்பதும் இத்திருக்கோயிலின் தனிச்சிறப்பு.


இத்திருக்கோயிலுள்ள சுரதேவருக்கு வெந்நீர் அபிசேகம் செய்வித்தால், எந்த சுரமும் நீங்கிவிடும். ஸ்ரீசுவாமி சன்னதியில் வைக்கப்பட்டுள்ள உரலில் திரு-மஞ்சன திரவியத்திற்குத் தேவையான பொருட்களைக்கொண்டுவந்து திரவியப்பொடி இடித்துவைப்பதும், அம்பாள் சந்நிதியில் வைக்கப்பட்டுள்ள அம்மியில் மஞ்சள்கொண்டு வந்து அரைத்து வைப்பதும் மகளிருக்கு மாங்கல்ய பலத்திற்கு இக்கோயிலில் ஏற்பட்டுள்ள நேர்த்திக்கடன்கள், இந்நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதால் பெண்களுக்கு விரைவில் திருமணம் நடந்தேறுகிறது.

மணப்படைவீட்டை ஆட்சிபுரிந்த சீவலப்பாண்டியன் காலத்தில் கட்டப்பட்ட இவ்வாலயத்தில் ராஜராஜசோழன்தேவர், ராஜேந்திரசோழன் ,பிற்காலப்பாண்டியர்கள் கல்வெட்டுக்கள் ஏராளமாக உள்ளன. 1895ம் ஆண்டிலேயே தொல்பொருள் ஆய்வுத் துறையினர் இவைகளை நகலெடுத்துள்ளனர்.

உ

சிஞ்சாவனம் என்கிற
ஸ்ரீ
கங்கை கொண்டான் ஸ்தல மகாத்மியம்

தமிழ் வசனம்.



இஃது

கங்கை கொண்டான்

பி. கைலாச பட்டர் அவர்களால்,

செய்யப்பட்டது

ஆவணி மாதம் விரோதி வருஷம்.

1949.

உ

பரத கணபதயே நம:

ஸ்ரீ ஆனந்தவல்லி கைலாசநாதர் சகாயம்.

முகவுரை.

த்ரிகூடாசல மகாத்மியத்தில் ருத்ராக்ஷ சித்ரா விருக்ஷம் பசுபதிலிங்கம் ஸ்ரீ பூகைலாசநாதர் என்று சொல்லப்படுகிறது. ஸ்ரீ வல்லப மகாராஜாவுக்கு கண்ணும் கையும் கொடுத்ததால் கண்ணைகொண்டான் என்றும், சித்ரா நதியிலுள்ள காமதேனு தீர்த்தத்தில் கங்கை சொரிவதைக் கண்டதால் கங்கைகொண்டான் என்றும் வழங்கப்படுகிற க்ஷேத்திரத்தின் வரலாற்றை கூறுவது சித்ராசல மகாத்மியம். இவைகள் ஸம்ஸ்க்ருதத்தில் ஸ்லோகமாக இருக்கிறது. இத்தலத்திலுள்ள ஸ்ரீ ஆனந்தவல்லி அம்மை சிலா விக்கிரகமும் எழுந்திருந்து செப்பு வடிவமும் நான்கு கைகளுடன் அமையப்பெற்றிருப்பது இப்பாண்டிய நாட்டிற்கு ஒரு விசேடமாகும். அக்னிதேவர் பூஜை நடந்த காக்ஷிகளும் திருவிழாவாக நடைபெற்று வந்திருப்பது இப்போது நடைபெறாமலிருப்பதை வைத்து இந்த மகாத்மியங்கள் தமிழில் இருந்தால் யாவர்களுக்கும் தெரிந்துகொள்ளவும் ஐதிக விழாக்களை நடத்தவும் ஏதுவாக இருக்குமென்று இக்கோவில் தர்மகர்த்தாவாக இருந்த செப்பறை அழகியகூத்தக்குருக்கள் என்னிடம் ஞாபகப்படுத்தினார்கள். இந்த ஸ்தல மகாத்மியம் கங்கைகொண்டான் சு. அனந்து கனபாடிகளிடம் கிரந்தமாகவும் என்னிடம் ஆகமமாகவும் செப்பறைமடத்தில் தமிழாகவும் இருந்த பிரதிகளை ஒத்துப் பார்த்து சிலதுகள் சேர்த்தும் சுருக்கியும் அ. சுப்பிரமணிய அய்யர் அவர்களால் அச்சுக்கு வேண்டியபடி காப்பிசெய்து கொடுத்ததனால் அச்சு போடப்பட்டிருக்கிறது.

கைலாசநாதர்கோவில் ஸ்தானிகம்
பிச்சுபட்டரவர்கள் குமாரர்
கைலாச பட்டர்
கங்கைகொண்டான்.

திந்த்ரிணீவன ஸ்தல மாஹாத்மியம்

அத்தியாயம் 1.

சௌனகாதி முனிவர்கள் கோமதி நதி தீரத்திலிருக்கிற நைமிசாரண்யம் என்ற பெயருடைய மஹா ஸ்தலத்தை அடைந்து அங்கிருக்கிற மஹாஸ்ரேஷ்டமான விஷ்ணுப்ரீதியாக பகவானை உத்தேசித்து ஒரு நாள் நடத்தக்கூடிய யாகத்தைச் செய்தார்கள்.

அப்பொழுது சகல புராணங்களையும் அறிந்து மற்றவர்களுக்கு சொல்லுவதில் ஸமர்த்தரான ஸூத மஹாமுனிவர் புண்ய ப்ரதமான யாகத்தைப் பார்க்க வேணுமென்று இச்சையோடும் அங்கிருக்கிற மஹாமுனிவர்களையும் உத்தமமான ஸ்தலத்தையும் பார்க்கும் பொருட்டும் வந்தார். அந்த ஸூதரை சகலமான முனிவர்களும் ஸந்தோஷ மகிழ்ச்சியுடன் அர்க்ய பாத்ய ஆசமனங்களினால் உபசரித்து அர்ச்சித்து இரு கைகளையும் கூப்பி நமஸ்காரம் செய்தார்கள். இவர்களால் கொடுக்கப்பட்ட ஆஸனத்தில் இருக்கிறவராயும், பௌராணிகர்களுக்குள் உத்தமராயும் வேதங்களில் சொல்லப்பட்ட ஆசாரத்தோடு கூடினவராயும், வியாச முனிக்கு சிஷ்யரும் மஹா புத்திமானும் விஷ்ணுவிடம் பக்தி உள்ளவராயும், ப்ராமணர்களிடத்தில் ப்ரியராயும் வேதமார்க்கத்திலிருந்து விலகாதவராயும் வேதத்தில் சொல்லப்பட்ட தர்மங்களை அநுசரிக்கிறவராயும் பதினெண் புராணங்களை நன்றாய் தெரிந்தவராயுமுள்ள ஸூதரைப் பார்த்து புராணங்களை கேட்பதில் ஆசையுள்ளவராயிருக்கிற முனிவர்கள் கேட்கலானார்கள். ஸூதர் சொல்லுகிறார். அந்த காலத்தில் குற்றமற்ற மங்களமான க்ஷேத்ரம் என்ற தென்னாட்டின் தக்ஷிணத்தில் மங்களமாய் ஓடி வருகிற சித்ரா நதியின் கரையில் திருமால் ஸாக்ஷாத்காரமாய்

2-A

செய்து அகஸ்தியர் பூசித்தார் மகாலிங்கத்தின் தென் பாகத்திலிருந்து ஆவாகனங்கள் பூஜைகளைச் செய்த ஸ்தோத்திரங்கள் செய்து லிங்கத்தை கண் களிக்கப் பார்த்துக் கொண்டு நின்றார். அச்சிவலிங்கத்தினின்று பார்வதி சமேதராய் பரமசிவன் தோன்றினார். எவ்வித மென்னில் கைலாச மலைபோல் உன்னதமான வெளுப்பாயுள்ள இடபாரூடராய் தரிசனம் கொடுத்தார். அகஸ்தியரை பார்த்து சொல்லுகிறார். "கடத்திலுண்டான முனியே உன் பக்தியினாலும் பூஜையினாலும் நான் மிகவும் மகிழ்ச்சியுற்றேன். உனக்கு வேண்டிய வரத்தை அளிக்க வேணுமென்று ஆவிர்பவித்தேன்." என்று அருளினார். முனிவர் கேட்டு சந்தோஷமடைந்து "சம்போ! உம்முடைய பாதாரவிந்த தரிசனத்தினால் என் பிறவியானது தபசினாலும் ஞானத்தினாலும் பிரயோஜனத்தை அடைந்து நான் கிருதார்த்தனானேன்" என்று சொன்னார். உடனே பகவான் "ஓ அகஸ்திய, நீ கேட்ட பிரகாரம் வரங்களை அனுக்கிரகித்தேன்". என அருளினாலும் சொற்ப காலத்தில் அளவில்லாத பலனைக்கொடுக்கிறதாயிருக்கிற முக்கிய ஸ்தலங்களை தரிசிக்க விரும்பிய குட முனியைப் பார்த்து, பகவான் "கடத்தினின்றும் உற்பத்தியான முனியே! நான் வசிக்கிற ஸ்தலங்கள் அநேகமிருக்கின்றன. அந்த ஸ்தலங்களில் முக்கியமானவைகளைச் சொல்கிறேன், சாவதானமாய் கேள். வேணுவனம் (அதாவது திருநெல்வேலி) சம்பகவனம் (குற்றாலத்தின் மேல் பிரதேசம்) சிந்தூரவனம் (கங்கைகொண்டான்) இந்த மூன்று ஸ்தலங்களும் எனக்கு மூன்று நேத்ரங்கள் என்று அறியவும். இதற்கு அவயவங்களாயும் மகுடங்களாயும் உள்ள மற்ற ஸ்தலங்களையும் என்னுடைய மற்ற அங்கங்களாக அறிந்துகொள், சகல சரீரங்களுக்கும் முக்கியமானது சிரசு. அதில் முக்கியமானவை நேத்திரமன்றோ ஆகையால் வேணுவனம், சம்பகவனம், சிந்தூரவனம் இந்த மூன்றும் எனக்கு முக்கியங்கள். வேணுவனத்தில் சூரியன் என்னை பூஜை செய்து எனது வலது நேத்திரமாயிருக்கும் தன்மையை அடைந்தான். அந்த ஸ்தலம் வேணுவனம் மிகவும் சௌக்கியமானது. யாதொரு இடத்தில்

சந்திரனானவன் என்னை பூஜித்து இடது கண்ணாயிருக்கும் தன்மையை அடைந்தானோ அந்த ஸ்தலம் சம்பகாவனம் எவ்விடத்தில் அக்கினியானவன் என்னை பூஜித்து நெற்றிக் கண்ணாயிருக்கும் தன்மையை அடைந்தானோ அந்த ஸ்தலம் திந்த்ரீவனம் இந்த மூன்று ஸ்தலங்களும் கைலாச பர்வதத்தை காட்டிலும் எனக்கு பிரியமானவை. ஏ! அகஸ்தியனே, பார்வதியின் பொருட்டு என்னால் சொல்லப்பட்டதான இந்த ரகசியமான மூன்று ஸ்தல மகாத்மியத்தை உனக்குச் சொன்னேன்". என்று சொல்லி விட்டு அந்த லிங்கத்திலுள் மறைந்தார். பிறகு அகஸ்தியர் பகவானால் சொல்லப்பட்ட அந்த மார்க்கத்தோடு அந்த ஸ்தலங்களை அடைந்த அந்த லிங்கங்களை தரிசித்து மலயாசலத்தை அடைந்தார். அந்த மலய பர்வதமானது மகா மேருபர்வதம்போல் அதியுன்னதமாயும் சந்தன தருக்களால் நிறைந்ததாயும் அநேக தேவதைகள் வசிக்கக்கூடியதாயும் காந்துவாரங்களோடு கூடினதாயும் புண்ய தருக்களால் சோபிக்கிறதாயும் அநேக பழவர்க்கங்களோடு கூடினதாயும் அருவிகளால் சோபிக்கிறதாயும் அநேக மிருக ஜாதிகளால் வியாபிக்கப் பட்டதாயும் பறவை இனங்களால் சோபிக்கப்பட்டதாயும் இருக்கிறது. சிலாக்கியமான அந்த பர்வதத்தை லோபாமுத்திரை என்ற தன் பத்தினியுடன் அடைந்து நதிகளுக்கு உத்தமமான தாம்பிரவர்ணியை- எல்லாவிதமான பிராணிகளின் உபகாரத்தின் பொருட்டும் விருத்தி செய்து கொண்டு அகஸ்தியமுனிவர் தவரியற்றி வருகிறார். அந்த தாம்பிர வருணியானது சித்திரா நதியுடன் சிவசைலபேரியில் வந்து சேருகிறது முனிகளே? இவ்விதம் அகஸ்தியமுனிக்கு சந்தோஷம் வரும் பொருட்டு பார்வதிக்கு முன் கொஞ்சம் சொல்லப்பட்டதாயுள்ள ரகசியமான சம்பகாரண்ய முதலான மூன்று ஸ்தல வைபவத்தை பகவான் சொன்னாரென்று ஸூதமுனி நைமிசாரண்ய வாசிகளுக்குச் சொன்னார்.

ஸ்கந்தபுராணத்தில் சிஞ்சாவன மகாத்மியத்தில் அகஸ்திய சிவஸம்வாதமான முதல் அத்தியாயம் முற்றிற்று.

அத்தியாயம் 2.

சூதர் வசனத்தை கேட்டு முனிவர்கள் மறுபடியும் சொல்லுகிறார்கள். அகஸ்தியரின் பொருட்டு சொல்லப்பட்ட மூன்று மகாத்மியங்களில் இரண்டைக் கேட்டிருக்கிறோம். திரிசிரஸ்வன மகாத்மியத்தை கேட்க நாங்கள் இச்சிக்கிறோம் அதைச் சொல்ல வேணுமென்று கேட்க சூதர் சொல்லுகிறார். முற்காலத்தில் கிருத யுகத்தில் தக்ஷயாகத்திலே தேவர்கள் எப்பொழுது சிவத் துரோகத்தை அடைந்தார்களோ அதுமுதல் தேவர்களை அசுரர்கள் ஜயித்தார்கள். அசுரர்களால் ஜயிக்கப்பட்ட தேவர்கள் பிரமாவினால் சொல்லப்பட்ட திரிகூடாசலம் என்று பிரசித்தமான சிவஸ்தலத்திலிருக்கிற சிவனை ஆராதித்து சிவத்துரோகங்களினின்றும் விடுபட்டார்கள் என்று சொன்ன கதையை காமதேனு கேட்டு கற்பக விருக்ஷத்தோடும் சிந்தாமணியோடும் அந்த திரிகூடாசலமென்று குற்றாலத்தை அடைந்து அங்கு அம்பிகையோடு கூடினவரும் சகலருக்கும் சௌக்யத்தை கொடுப்பவருமான அந்த சிவனைப் பார்த்து பிரீதியுடன் வேதார்த்தமான ஸ்தோத்திரம் செய்தது. அது எப்படி என்றால், "பிரும்மா விஷ்ணு இவர்களால் பூஜிக்கப்பட்ட பாதங்களையுடையவராயும் உள்ள உமக்கு வணக்கம்". இதைக் கேட்டு, "ஏ காமதேனுவே இந்த ஸ்தோத்திரத்தினால் மிகவும் பிரீதியடைந்தேன், உனக்கு விருப்பமானவைகளைக் கேள். வேண்டிய வரத்தை தருகிறேன்" என்பதாக பகவான் திருவாய்மலர்ந்தருளினார். காமதேனுவானது "பகவானே! தேவர்களுக்கு அதிபதியேதங்களுக்கு என்னிடத்தில் பிரியம் இருக்குமானால் எல்லா கர்மங்களுக்கும் என்னை சம்பந்தித்த பால் நெய் முதலானதுகள் சிரேஷ்டமாக ஏற்படட்டும் இன்னும், என்னுடைய இலக்கணமுள்ள பசுக்களுடையவும் சம்பந்தமான பால் நெய் முதலானதுகள் சகல யாகங்களுக்கும் சர்வகாலமும் சகல யாகதிரவியங்களுக்கும் பரிசுத்தமாக பவிக்கட்டும். யாகம் செய்ய யோக்கியதை யில்லாதவர்களுடைய யாகம் முதலான கர்மங்களிலே எங்களுடைய பால் நெய்

முதலான திரவியங்கள் உபயோகப்படுத்துவதில் யாதொரு தோஷங்கள் ஏற்படுமோ அப்படி ஏற்பட்ட தோஷங்களை நீங்கள் மன்னிக்க வேணும். இன்னமும் உம்முடைய பாதாரவிந்தத்திலே, பக்தியையடையவும், எங்கள் சம்பந்தமான பசுக்களுடைய பாலினாலே சிவலிங்காபிஷேகமும் ஆவதால் கிட்டும் பலன்கள் பெறவும் ஆகின்ற இந்த வரத்தை, ஏ! கயிலாசபதே! எனக்குத் தாரும். அவிடத்திலே எங்களுக்கு மங்களகரமான உம்முடைய ஆனந்த தாண்டவத்தை பார்க்கும்படி செய்யும்", என்று சொல்ல, பரமசிவன் "ஏ! காமதேனுவே எந்தெந்த விஷயங்களை பிரார்த்தித்து கேட்கிறாயோ அந்த வரங்கள் எல்லாவற்றையும் கொடுத்தேன். என்னுடைய அருளால் இன்னமும் யார் யார் உன்னிடத்தில் எந்தெந்த வரங்களைக் கேட்கிறார்களோ அந்த வரங்களைக் கொடுக்கும்படியான சக்தி உனக்கு உண்டாகட்டும். உன்னால் சொல்லப்பட்ட தர்மாசாரமானது எல்லோருக்கும் சுகத்தை கொடுக்கக்கூடியது. ஆனதினால் உன்னிடத்தில் உண்டான ரிஷபம் என்று காரியமானது எனக்கு என்று வாகனமாக ஆகிறதோ அதுமுதல் நான் ரிஷபத்தில் இருக்கிறவர் என்று பெயர். அந்த ரிஷப வாகனத்திலிருக்கிற என்னை யாரொருவர்கள் பூலோகத்திலுண்டான திருகிரிவனத்தில் தரிசனம் செய்கிறார்களோ அவர்களுடைய இச்சைகளானது சித்திக்கிறது. ஆனதினால் ஏ! காமதேனுவே! இந்த கலியுகத்தில் சீக்கிரமாக சித்தியைக் கொடுக்கிறதாயும் மங்களத்தோடு கூடினதாயிருக்கிற ஸ்தலத்தில் லிங்க ரூபமாயும் திருகிரிவன நாயகராயிருக்கிற என்னை பூஜை செய். மற்ற ஸ்தலங்களை விட பரிசுத்தத்தையும் கங்கையில் குளித்த பலனையும் கொடுக்கக் கூடியதாயிருக்கிற சித்திரா நதியில் ஒரு தீர்த்தமானது நீர் மூழ்கவும் பானங்களுக்குமாக உனக்கு என்னால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சித்ரா நதியில் ஒரு தீர்த்தமானது உதயமாகி கற்பகவிருட்ச ரூபமான புளியமரங்களினால் சோபிதமாயுள்ள தென்கரையிலிருக்கிற தலத்தில் சைலாசநாதரென்ற பெயருடைய என்னை லிங்க ரூபமாக அறிந்துகொள். மங்களத்தோடு கூடின காம

தேனுவே! அந்த கைலாசநாதருக்கு வாயு திக்கில் இருக்கிற சீர்ண நதியின் நாலுபக்கங்களிலும் பரந்திருக்கிற அந்த தீர்த்தமானது உன்னுடைய காமதேனுவைப்போல் பிரசித்தமாயும் பரிசுத்தமாயும் இருக்க வேண்டுமென்று என்னால் உனக்கு கொடுக்கப்பட்டது. இந்த பிரகாரம் பிரசித்த பரப்புள்ள சகல சித்திகளையும் கொடுக்கிறதாயிருக்கிற இந்த தேனு தீர்த்தமானது இருக்கிறது. அப்படியிருக்கிற பிரகாரம்காமதேனு தீர்த்தத்தில் எவர்கள்குளிக்கிறார்களோ அவர்களுக்கு என்னுடைய அருளானது சித்திக்கட்டும். ஓ! சிந்தாமணியே! நீயும் அந்த காமதேனு தீர்த்தக்கரையில் என்னுடைய லிங்கத்தை பூஜைசெய்து கொண்டிருப்பாயாக. உங்களுக்கு என்னுடைய தாண்டவத்தை காட்டுகிறேன். ஓ! கற்பக விருக்ஷமே! நீயும் சிதம்பரவனத்தை அடைந்து புளியமரமாக ஆகவேண்டும். என்றும் பக்தியோடு தபசு செய்வாய். ஓ! காமதேனு! நீயும் அந்த இடத்தில் கலியுகம் எப்பொழுது வருமென்று எதிர்பார்த்து புளிய மரத்தில் மூலத்திலிருக்கிற என்னை உன்னுடைய சுத்தமான பாலினால் அபிஷேகம் செய்து வை"

இவ்விதமாக பகவான் காமதேனு முதலானதுகளை ஆனந்தத்தை அநுபவிக்கச் செய்து சுவர்க்கலோகத்திற்கு அனுப்பித்தபின் தான் கயிலாச பர்வதத்திலிருந்தார்." என்று ஸூதர் நைமிசாரண்யவாசிகளான ரிஷிகளுக்கு சொன்னார்.

2-ம் அத்தியாயம் முற்றிற்று.

அத்தியாயம் 3

கலியுகத்தில் ஒரு காலம் வீரபராக்கிரம பாண்டிய அரசரும் ஸ்ரீவல்லப அரசரும் சேர்ந்து சைன்யத்தோடு சத்ருக்களை வென்று தாமிரபரணி தெற்குகரையில் மணப்படை என்ற பட்டினத்தில் வாசம் செய்தார்கள். அந்த அரசரை சகலரும் சரணடைந்தார்கள். அதிபதிகளிடமிருந்து வென்று கொண்டு வந்த தனங்களை

வைத்த தாமிரபர்ணிக்கு வடகரையில் இராஜவல்லிபுரம் என்ற ஒரு பட்டணத்தை உண்டு பண்ணி அதில் வசிக்கும் பிராமணர்களுக்கு அந்த அரசர் வைகாசி மாதத்தில் மகத்தாயுள்ள மகா தானங்கள் கொடுத்து அவர்களுக்கு சாப்பாடு செய்வித்தார். ஆயிரம் அலங்கார கோதானங்களும் வாஜபேய முதலான யாகங்களையும் செய்து கொண்டு இருந்தார்கள், தானம் செய்த கோக்களில் காமதேனுவும் ஒரு கன்றுக் குட்டியாயிருந்து சூர்யாக்யனென்ற ஒரு சிவ பக்தனுடைய வீட்டில் வாசம் செய்தது. பிறகு சில வருடங்களுக்குள் அந்த காமதேனுவானது பரமசிவனுக்கு ரிஷபமாக வேண்டிய ஒரு வெள்ளைக் கன்றுக்குட்டியைப் பிரசவித்தது. பிரசவித்த கன்றுக்குட்டியோடு அந்த காமதேனுவானது அநேக பசுக்கூட்டங்களுடன் கூட சகல வஸ்யங்களும் நிறைந்ததாயும் மனோக்ஞியமாயும் இருக்கிற சித்ராநதிக்கரை நீர்த்தத்தையும் சாப்பிட்டும் புசித்து தினந்தோறும் கிருகம் வந்து சேரும். சித்திரை மாதத்தில் அக்ஷய திருதியை தினத்தன்று அந்த காமதேனுவானது சிஞ்சாவனத்தின் கண் புளிய மரத்தடியிலிருக்கும் மகாலிங்கத்திற்கு தன்னுடைய பால் முழுவதும் நீராட்டி வந்தது. அதாவது ஒரு மண்டலம் முடியும்வரையும் அபிஷேகம் செய்து ஒவ்வொரு நாளும் வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தது. இப்படி நீராட்டும் காலத்தில் ஒரு மண்டலத்தின் முடிவான கடைசியில் கைலாசநாதஸ்வாமியானவர் தன்னுடைய லிங்கத்தையும் ஸ்தலத்தையும் பிரகாசத்தையும் சகல ஜனங்களுக்கும் தெரியும்படி செய்ய வேண்டுமென்றும் ரட்சிக்க வேண்டுமென்றும் திருவுளம் கொண்டு கிருபை புரிந்தார்.

அந்த சிவபக்தனை சூரியாக்யனுடைய பத்னி ரொம்ப கோபத்துடன் ஒவ்வொரு தினமும் மாடு மேய்க்கிற இடையனை பசுவினிடத்தில் பால் கறக்கிற காரணமென்னவென்று கேட்டு வந்தாள். இந்த பிரகாரம் பிரதிதினமும் அதட்டப்பட்ட அந்த இடையன் ஒரு நாள் காலை முதல் சாயங்காலம் வரை காமதேனுவென்ற பசுவை பின்

தொடர்ந்து பார்க்கிற காலத்தில் அந்தப் பசுவானது சூரியன் உச்சிக்கு வருகிற மத்தியான வேளையில் சிஞ்சாவனத்தில் இருக்கிற புளிய மரத்தடியில் பால் சொரிகிறதைப் பார்த்தான்.

இந்த விருத்தாந்தங்களை சூரிய சர்மாவிடத்திலும் மற்ற ஜனங்களிடத்திலும் தெரிவித்து கன்றை அந்த பிராமணை அதி வம்பாய் நிந்திப்பதாகச் சொன்னான். அந்த மணப்படை அரசரும் இந்த செய்தியைக் கேட்டு இடையனை முன்னிட்டுக் கொண்டு புளிய மரத்தடியில் வந்து சோதனை செய்தார். அப்போது சோதிக்கப்பட்ட இடத்தில் இருந்து ரத்தம் கசிந்து ஸ்ரீவல்லப அரசருக்கு நேத்திரமும் சோதித்தவனுக்கு கையும் பின்னம் ஏற்பட்டது. அரசரானவர் விசனப்பட்டு தன் பட்டணத்து ஜனங்களுடன் வந்து சேர்ந்தார். அன்று இராத்திரி நித்திரையில் பகவான் வந்து காவலனிடம், "நான் உற்பத்தியாயிருக்கிறேன். அந்த விருட்சத்தை வெட்டாதே" என்றும், "அதிலிருந்து தோன்றாநிற்குமது 96) அடியில் சிவந்த ரூபத்தில் நான் இருக்கிறேன்" என்றும் சொல்லி மறைந்தார்.

இந்தப் பிரகாரம் இரவு சொப்பனம் கண்ட அரசன் காலையில் எழுந்திருந்து மிகவும் களிப்புடன் கூடினவராய் வேண்டிய மக்களுடன் சிஞ்சா வனத்தைப் பார்க்கவேணுமென்று வந்தார்கள். அந்தப் புளியமரத்தின் மேல் பாகத்தின் அந்த லிங்கத்தைப் பார்த்தார்கள். உடனே அந்த அதிபதி அந்த இடத்தில் சாமான்களைச் சேகரித்து ஆலயத்தை நிர்மாணம் செய்தார். உடன் அரசர் கும்பாபிஷேகம் செய்ய ஆரம்பித்தார். கும்பாபிஷேக காலத்தில் அரசருக்கு நேத்திரமும் சோதித்தவனுக்கு கையும் பகவான் அருளினார். அரசர் மகாலிங்கத்தை தன் கண்ணால் கண்டு ஆனந்தமாய் களிப்புற்று ஸ்ரீ வல்லப அரசர் "கண்ணும் கையும் கொடுத்த கைலாசநாதரென்று" பகவானை தோத்திரம் செய்தார். நித்ய பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து அரசரும் மக்களும் மகிழ்வெய்தி தன் பட்டணமான மணப்படையில்

3_A.

வசித்துக் கொண்டிருந்தார். ஏ! முனிவர்களே! இப்பவும் மங்களகரமான சித்ரா நக்ஷத்திரத்தில் அந்த சிஞ்சாவனத்தினுடைய அற்புத தரிசனத்தை நீங்கள் பார்க்கலாம். கலியுகத்தில் அது முதல்கொண்டு கைலாசநாதருடைய சோபிதமாயும் சரலிங்கமாயும் உள்ள லிங்கமானது இந்த சிஞ்சாவனத்திலிருக்கிறது.

3-ம் அத்தியாயம் முற்றிற்று.

அத்தியாயம் 4

ஸ்ரீவல்லப அரசரானவர் ஏற்படுத்தியிருந்த பூஜைக்காரர்கள் வந்து கைலாசநாதருடைய ஆலயத்தில் கர்ப்பகிருகத்தில் மேலே தாருவால் போட்டிருந்த கட்டைகள் அக்னியாய் சாம்பலாய் விட்டதென்று அரசரிடம் சொன்னார்கள். அதைக்கேட்டு உடன் வந்து பார்க்கும்பொழுது அவ்விதமாய் இருக்கிறதைப் பார்த்து திரும்பவும் தாருவால் செய்தார்கள். திரும்பவும் சாம்பலாயிற்று. இவ்வாறு நஷ்டப்படுகிறதை அறிந்து மனதுக்கு ரொம்பவும் வருத்தப்பட்டு ஸ்வாமியை வணங்கினார்கள். அரசர் அன்ன ஆகாரமில்லாமல் ஒரே மனதாக தபசு இருந்தார். பகவான் அரசின் தபசுக்குக் களிப்புற்று பிரசன்னமாகி என்ன வரம் வேண்டுமென்று கேட்டார். அரசன் ஸ்வாமியைப் பார்த்து என் கவலை தீர வேணுமென்று கேட்டான். அது என்னது என்று பகவான் வினவியபொழுது கர்ப்பகிரகம் செய்ததில் தாரு அக்னியால் நஷ்டப்பட்டது என்று சொன்னார். பகவான் சொல்லுகிறார்:- "இந்த கைலாசநாதருக்கு நேத்திரம் மூன்று. ஆகையால் அந்த கர்ப்பகிரகமானது அக்னியால் சேதப்பட்டது. அக்னியானவன் அந்த பகவானின் பூஜை தோத்திரம் செய்து நெற்றிக்கண்ணை அடைந்தவனாக இருக்கிறான். நீ அந்த கர்ப்பகிருகத்தை சிலா ரூபமாகச் செய்" என்று சொல்லி மறைந்தார். அரசன் அவ்வாறே அதை கல்பணியாக செய்து மிக்க களிப்புடன் தன் பட்டணம் போயிருந்தான்.

5. இலஞ்சி

இவ்வூர் தென்காசி வட்டத்தில் தென்காசிக்கு வடமேற்கே சுமார் 20 கி.மீ. தொலைவில் அமைந் துள்ளது.

இவ்வூர்ப் பகுதியில் பெருங்கற்காலத்தைச் சார்ந்த சுமார் 2,500 ஆண்டுகட்கு முற்பட்ட ஈமத் தாழிகள் ஒன்றினுள் அக்கால மனித மண்டையோடு முழுமையாகக் கிடைத்துள்ளது. இவ்வூரின் தொன்மை வரலாறு பெருங்கற்காலத்திலிருந்து தொடங்கு வதை இச்சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

இவ்வூரில் பிற்காலப் பாண்டியர் காலத்தில் எடுக்கப்பட்ட குமாரசுவாமி கோயில் உள்ளது. இக்கோயிலில் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் (கி.பி. 1409) 14-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, மாறவர்மன் சீவல்லபனின் 30-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சடாவர்மன் குலசேகர பாண்டியனின் 10-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் இவ்வூர் 'தென்வாரிநாட்டு இலஞ்சி எனும் சுந்தரபாண்டிய நல்லூர்' என்றும், 'சுந்தரபாண்டியநல்லூர்' என்றும், இறைவன் 'இருவற்கு ஈஸ்வரமுடைய நாயனார்' என்றும் "திருபாகீஸ்வரமுடைய நாயனார்" என்றும் குறிப்பிடப்படுகின்றன.

6. கங்கைகொண்டான்

இவ்வூர் மதுரை - திருநெல்வேலி சாலையில் திருநெல்வேலிக்கு வடக்கே 16 கி.மீ. தொலைவில் சிற்றாற்றின் வட கரையில் அமைந்துள்ளது.

-Contd-

4-A.

இவ்வூரின் மேற்கே சிற்றாற்றின் (தொன்மை பெயர் சித்ராநதி) தென்கரையில் சோழர் காலத்தில் எடுப்பிக்கப்பட்ட கைலாசநாதர் கோயில் இவ்வூரின் வரலாற்றினை ஓரளவு அறிந்து கொள்வதற்குத் துணைபுரிகின்றது.

தலபுராணத்தில் அகத்தியரால் தென்பாண்டி நாட்டில் அர்ப்பணம் செய்யப்பட்ட மூன்று கோயில் களில் ஒன்றாக இக்கைலாசநாதர் கோயில் கருதப் படுகிறது. மேலும் புளியவனத்தில் (கல்பக) உள்ள இக்கோயில் அக்கினி வழிபட்டதாகவும், சிவனின் மூன்றாவது கண்ணாகவும் கருதப்பட்டு வருகின்றது

இக்கோயிலில் மூன்றாம் இராசராசன் மற்றும் முதலாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இராசராசனின் 8 மற்றும் 26-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளில் இவ்வூர் 'ஸ்ரீவல்லபச் சதுர்வேதி மங்கலம்' எனக் குறிப்பிடப்படு கின்றது. இப்பெயரே இராசேந்திர சோழனின் தொடக்க ஆட்சிக்காலம் வரை நிலவி வந்துள்ளது. இவனது கங்கையாற்றுப் படுகையின் படையெடுப் பிற்குப் பின் இவ்வூர் 'கங்கைகொண்ட சோழச் சதுர் வேதி மங்கலம்' எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளதை சடாவர்மன் சுந்தரசோழ பாண்டியனின் கல்வெட் டொன்றின் மூலம் அறியலாம். இக்கோயிலில் பொறிக் கப்பட்டுள்ள பாண்டியர் கல்வெட்டுகளில் மாறஞ் சடையன், முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், சீவல்லபன் ஆகியோரது கல்வெட்டுகள் அடங்கும். மாறஞ்சடையனின் கல்வெட்டில் இவ்வூர் 'கீழ்களக் கூற்றத்து பிரம்மதேயம் 'சீவல்லமங்கலம்' என்றும், இறைவன் 'ஸ்ரீகயிலாயத்துப் படாரர்' என்றும் குறிப்பிடப்படுகின்றன. முதலாம் மாறவர்மன் சுந்தர

பாண்டியன் கல்வெட்டில் இவ்வூர் 'கீழ்களக்கூற்றம் கங்கைகொண்டான்' என்றும் இறைவன் 'ஸ்ரீகயிலாய முடையநாயனார் என்றும் குறிப்பிடப்படுகின்றன.

இக்கோயில் முதலாம் பராந்தக சோழனால் (மதிரை கொண்டான்) எடுப்பிக்கப்பட்டிருக்கலாமோ எனும் ஐயத்தினை முதலாம் இராசராசனின் 26-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று ஏற் படுத்துகின்றது. இக்கோயிலுக்கருகில் 'ஸ்ரீ வீர நாராயண ஏரி' என்னும் ஒரு குளம் இருந்ததாக இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. முதலாம் பராந்தக னுக்கு வீரநாராயணன் என்ற பட்டப்பெயர் இருந்தது இங்கு கருத்தில் கொள்ளத் தக்கது. ஆனால் தற்போது காணப்படும் கோயிலின் முழுப்பகுதியும் முதலாம் இராசராசன் மற்றும் முதலாம் இராசேந் திரனின் கலைப்பாணியினை ஒத்ததாகவே விளங்கு கின்றது.

7. கடையம்

கீழ்க்கடையம், மேற்கடையம் என இரு பகுதி களாக உள்ளது. தென்காசி வட்டத்தில் தென்காசிக்கு தென்கிழக்கே அமைந்துள்ளது. கீழ்க்கடையத்தில் ஒரு பாறையில் மாறவர்மன் விக்கிரமபாண்டியனின் 3-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று பொறிக்கப் பட்டுள்ளது. இக்கல்வெட்டில் இவ்வூர் 'கோநாட்டு விக்கிரம பாண்டிய நல்லூர்' என்று குறிப்பிடப் படுகின்றது.

மேற்கடையத்தில் உள்ள கல்யாணி அம்மன் கோயிலில் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள்

பிரகாரங்கள் வரைந்து—   1944-ம் ஆண்டு அ.ச. அறநிலையக்காப்பு கழகத்தினரால் வெளியிடப்பட்டது.

அன்னம், குதிரை, சப்பரம், பூதம், பூங்கோயில், கற்பகமரம், மயில், யாளி, கிளி, இந்திர விமானம், காமதேனு, சிங்கம், கைலாசபருவதம், பெருச்சாளி, இருகுதிரை. திருக்கலியாணச் சப்பரமும் திருப்பல்லக்குகள் இரண்டுமுள்ளன. ஆறாம் திருவிழாவுக்கு ஆறாம் உருவம் இருக்கிறது.

எ. புராண வரலாறு

தலபுராணம் :—

இக்கோயிலுக்குத் தலபுராணம் பாடப்பெறவில்லை. இது தோன்றியது பற்றி வழங்கிவரும் பழைய வரலாற்றின் சுருக்கம் பின் வருவது :—

“ஒரு காலத்தில் தண்பொருநை யாற்றின் வடகரையிலுள்ள மணப்படை வீட்டிலிருந்து சீவல பாண்டியன் அரசாண்டிருந்தான். அவன் காலத்தில் பசு மந்தையிலிருந்த ஒரு காராம்பசு நாடோறும் சிற்றாற்றில் மூழ்கி அதன் கரையிலிருந்த புளியமரத்தடியில் பாலைச்சொரிந்து வருவது கண்ட அதன் உடையவன் அரசனிடம் தெரிவிக்க, பாண்டியன் அவ்விடத்தைச் சோதிக்கச் சொன்னான். மரத்தடியில் மண் வெட்டியால் வெட்டிப் பார்க்க ஒரு சிவலிங்கம் இருப்பது தெரிந்தது. வெட்டும்போது சிவலிங்கத்தின் உச்சியில் வெட்டு விழுந்தது. அப்படி அரசன் மண்வெட்டி விழும்பட அவன் ஓடிவந்து உண்மை தெரிந்து பணிந்து கோயில் கட்டத்தொடங்கினான். அப்போது பெருமான் ‘இந்த மரத்தை வெட்டினாலல்லவோ இங்கே கோயில் கட்டமுடியும். அப்படிச் செய்யாதே. நாம் இதன்மேற்கே சிறிது வடக்குச் சரியாகத் தோன்றுகிறோம். தம்பி

யிருப்போம். அங்கே கோயில்கட்டு” என்று அருளி அவ்விடத்தில் நடந்து சென்றிருந்தார். கோயில் அப்படியே கட்டப் பெற்றது. நடந்து சென்ற இலிங்கமானதால் நடலிங்கமென்றும், கபாலத்தில் வெட்டுப்பட்டவரானதால் காபாலீசர் எனவும் இப்பெருமான் பெயர் பெறுவார். அவ்வெட்டின் அடையாளத்தை இன்றும் காணலாம்.

திருவிழா

இங்கே சித்திரை மாதம் பெருந்திருவிழா நடைபெறும். ஐப்பசி மாதம் திருக்கலியாண விழா நடக்கும். தைப்பூசத்தில் தெப்பத் திருவிழாவரும்.

அருச்சனை

அட்டோத்திரம், திரிசதை, சகஸ்ரநாமம் என்னும் அருச்சனைகள் செய்யப்பெறுகின்றன. இவைகளுக்குக் கட்டணத் திட்டம் அமைக்கப்பெறவில்லை.

ஏ. சரித்திர வரலாறு.

கல் வெட்டுக்கள் :—

இத்திருக்கோயிலில் கல்வெட்டுக்கள் பல இருக்கின்றன. பதினொரு கல் வெட்டுக்கள் கல்வெட்டிலாகாவினரால் 1895ல் எடுக்கப்பட்டு அச்சிடப்பெற்றன.

பாண்டியருடையவும் சோழர்களுடையவும் ஆன கல் வெட்டுக்கள் இவை. கி. பி. 988—1011 வரை அரசாண்ட இராசராச சோழனும், கி. பி. 1011—1044 வரை ஆண்ட இராசேந்திர சோழனும், 1074 முதல்

உ

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டதேவன் மெல்லடி வாழ்க

கங்கைகொண்டான் கைலாசநாதர்கோவில் வரலாறு.

ஆசிரியர் :

திருவாளர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்,

அமைச்சர், சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம்,

தலைமைத் தமிழாசிரியர், போர்டு உயர் பள்ளிக்கூடம்,

சங்கரநயினார்கோவில்.

பார்வையாளர் :

செந்தமிழ்ப் புரவலர், இராவ் பகதூர், திருவாளர்

கோ. ம. இராமச்சந்திரன் செட்டியார் பி. ஏ., பி. எல்., அவர்கள்,

ஆணையாளர், இந்து அறநிலையக்காப்புக் கழகம்,

சென்னை.

வெளியிடுவோர் :

திருவாளர்கள் தே. ச. சின்னச்சங்கரலிங்கம் பிள்ளையவர்கள்

ஆட்சித் தருமகருத்தர்.

ச. கோமதிநாயகம் பிள்ளையவர்கள்

க. இரா. வேங்குவையரவர்கள்

தருமகருத்தர்கள்.

த. கா. சுப்பையாப் பிள்ளையவர்கள்

செயலாளர்.

கோவில் வெளியீடு.

1944.

பட்டின இதைத்தாண்டினால் உள் மணிவாசல் உளது. அதில் வாயில் காவலர் இருவரும் தெற்குப் பக்கம் பிள்ளையாரும் உள்ளனர். இதனை அடுத்திருப்பது கொடிமாமண்டபம். இதிலேதான் ஒரு நந்தியும் கொடிமரமும் பலிபீடமும் இருக்கின்றன. இதை ஒட்டிச் சிறிது தெற்கே சிவலிங்கப்பெருமான் முளைத்தெழுந்த புளிய மரமும் புதலிங்கமும் உள. இம்மரம் நன்றாகக் காய்க்கிறது. கொடிமர மண்டபத்தின் முன்புள்ள கோபுரம், திருநெல்வேலி நெல்லையப்பருடைய கோபுரம் கட்டும்போது தொடங்கியது, இடையில் அரசர் இறந்துபோனமையாலே முதல் கட்டோடு நின்றுவிட்டது என்பது கேள்வி. இனி அம்மை திருக்கோவிலை வணங்குவோம்.

கருப்பக் கிரகத்தில் அம்மை ஆனந்தவல்லி நான்கு கைகளுடன் விளங்குகின்றாள். அவளுடைய பழைய திருவுருவச்சிலையும் அடுத்த தென்பக்கத்தில் எழுந்தருளியிருக்கின்றது. அர்த்த மண்டபத்தில் பள்ளியறையம்மை இருக்கின்றாள். மாமண்டபத்தில் இரண்டு நந்திகளும் வாயில் காவலரும் பிள்ளையாரும் முருகனும் உள்ளார்கள். இனி அம்மைகோவில் உட்சுற்றினைக் காண்போம்.

உட்சுற்றில் கன்னியிற் பிள்ளையாரும், வடமேற்கில் வள்ளியம்மை தெய்வயானையுடன் முருகப்பெருமானும் வடக்கில் சண்டேசுவரியும் இருக்கின்றனர். வடகிழக்கில் மூன்று நிலைக்கண்ணாடிகளுடன் கூடிய திருப்பள்ளியறை உளது. இதில் பித்தளைச் சப்பரத்தோடு கூடிய ஊஞ்சலும் பித்தளை கிளியும் உள்ளன; இவை ஒரு பிராமணப் பெண்ணால் செய்துவைக்கப்பெற்றவை. அப்பெண் கண் தெரியாத

சங்கரன்கோவிலிலே சென்று தவம்இருப்ப, அம்மைகோமதி கனவிலே தோன்றிக் கண்ணைகொண்டானுக்குச் சென்று அனக்கவல்லியை வணங்கியிருந்தால் கண்தெரியும் எனக்கூறி வழியனுப்ப அங்ஙனமே அப்பெண் இங்கேவந்து வசன பிராக்கு கண்தெரிந்து மகிழ்ச்சியினாலே இவைகளைச்செய்து தக்காள். இவ்வரலாறு மிகவும் அண்மையானது. சங்கரன் கோவிலில் இருப்பதுபோலவே இங்கும் அம்மை திருமுன்பு ஒரு மந்திரச் சக்கரம் இருக்கிறது: அதனருகே வந்து வழி பாடு செய்பவர்களுக்குத் தீராத நோயென்பதே கிடையாது, இனி, கிழக்கே மணிவாயிலைத் தாண்டிக் கொடிமர மண்டபத்தில் வருவோம். இதில் வரிசையாக நந்தியும் கொடிமரமும் பலிபீடமும் இருக்கின்றன. பீடத்தின் முன் மிகப்பெரிய அழகான கருங்கல் ஒன்று கிழேவிழுந்து வணங்க வசதியாகப் பதிக்கப்பெற்றுள்ளது. இதன் முன் புள்ள பந்தல்மண்டபத்தில் வாகனங்கள் வைக்கப்பெறுவன. இதன் வடகிழக்கில் மடைப்பிள்ளையார் இருக்கிறார். அதன் முன்பு வெளிமண்டபமும் உள்ளது. இதிலுள்ள தலைவாயி லைத்தாண்டியதும் கோவில் வேலைநிலையம் இருக்கிறது. இரண்டு கோவில்களையும் சுற்றி நான்குபுறமும் பெரிய திரு மதில்கள் சூழ இருப்பன வெளிச்சுற்றுக்கள். பெருமான் கோவிலுக்குக் கீழ்ப்புறம் வெளிச்சுற்றில் தெற்கேபார்க்கவுள்ள பெரியமண்டபத்தில் வாகனங்கள் உள்ளன.

தீர்த்தங்கள், தலமரம் —

அதிலுள்ள கலியாணமண்டபமே அம்மை திருமண விழாவிலே காட்சிமண்டபம்; அதன்முன்புள்ளது காமதேனு தீர்த்தம். இதிலுள்ள பாறையில் கூத்தனைப் பெருமான்,

அம்மை, பசு பாலைக் கறந்து இலிங்கத்துக்கு முழுக்காட்டிய தாய திருவிளையாடல் எழுதப் பெற்றுள்ளன. இதன் பெயரது அக்கினித் தீர்த்தம். இத்தலத்தைப் பணிந்துபேறு பெற்ற அக்கினிக் கடவுள் தன் பெயரால் ஒரு தீர்த்தம் அமைத்திருக்கிறான். இத் தீர்த்தம் கிழக்கு வெளிச்சுற்றில் அம்மை கோவிலுக்கும் பெருமான்கோவிலுக்கும் இடையே அம்மைகோவிலை ஒட்டி உள்ளது. புளியே தலமரம்.

கோவிலின் முன்புள்ள நடுமண்டபத்தோடு கூடிய திருக்குளம் தெப்பவிழா நடைபெறும் பெருமை யுடையது.

காலம் முழுக்கு —

திருவனந்தல், விளாபூசை, காலசந்தி, உச்சிக்காலம், மாலைப்பூசை, அர்த்தயாமம், பள்ளியறை ஆகிய காலங்கள் நடைபெறுகின்றன. இவைகளில் முதலும் கடையும் தவிர ஏனைய காலங்களில் திருமுழுக்கு ஆட்டப் பெறுகிறது.

௬. சுற்றுக்கோவில்

கோவிலுக்குத் தென்கிழக்கேயுள்ள அக்காள்சாலைப் பிள்ளையார் கோவிலும் ஆற்றின் நடுவிலுள்ள செண்பகச் சாத்தன்கோவிலும் இதன் சுற்றுக்கோவில்கள்.

௭. ஆட்சி

சென்னை, இந்து அறநிலையக்காப்புக் கழகத்தாரால் நியமிக்கப் பெறும் மூன்று தரும கருத்தர்கள் ஆட்சியில் இக் கோவில் இருக்கிறது. மூவருள் ஒருவர் ஆட்சித் தருமகருத்தர். அக்காப்புக்கழகம் நியமிக்கும் செயலாளர் (மானேசர்) ஒருவர் கோவிலின் வரவு செலவினை நடத்தி வருகின்றார்.

௫. வரவு செலவு

பசலி 1353ன் வரவுசெலவுத்திட்டம் பின் வருவது.

வரவு

	ரூ.	அ.	பை.
முன் இருப்பு	4316	1	5
கருணை, நெல்	1615	0	0
தீர்வை	3100	0	0
புஞ்சை	210	0	0
கட்டிட வாடகை	300	0	0
அரசர் கொடை	1202	12	10
பிற	90	0	0
ஆக மொத்தம் ரூ.	10833	14	3

செலவு

	ரூ.	அ.	பை.
பணியாளர்	2000	0	0
படித்தரம்	1920	0	0
திருவிழா	1000	0	0
மராமத்து	160	0	0
வரி	900	0	0
வாகனாதி	60	0	0
சுகாதாரம் கல்வி	90	0	0
காப்புக்கழகம்	140	0	0
கணிக்கை	70	0	0
பல்வகை	150	0	0
கையிருப்பு	4343	14	3
ஆக மொத்தம் ரூ.	10833	14	3

[illegible] வாகனங்கள் [illegible]—

1944—ம் ஆண்டு [illegible] வெளியிடப்பட்டது.

அன்னம், குதிரை, சப்பரம், பூதம், பூங்கோயில், கற்பகமரம், மயில், யானை, கிளி, இந்திர விமானம், காமதேனு, சிம்மம், கைலாசபருவதம், பெருச்சாளி, சிறுகுதிரை. திருக்கலியாணச் சப்பரமும் திருப்பல்லக்குகள் இரண்டும் உள்ளன. ஆறாம் திருவிழாவுக்குத் ஆறாம் உருவம் இருக்கிறது.

எ. புராண வரலாறு

தலபுராணம் :—

இக்கோயிலுக்குத் தலபுராணம் பாடப்பெறவில்லை. இது தோன்றியது பற்றி வழங்கிவரும் பழைய வரலாற்றின் சுருக்கம் பின் வருவது :—

“ ஒரு காலத்தில் தண்பொருநை யாற்றின் வடகரைப் பகுதியை மணப்படை வீட்டிலிருந்து சீவல பாண்டியன் அரசாண்டிருந்தான். அவன் காலத்தில் பசு மந்தையிலிருந்த ஒரு காராம்பசு நாடோறும் சிற்றாற்றில் முழுகி அதன் கரையிலிருந்த புளியமரத்தடியில் பாலைச்சுரந்து வருவது கண்ட அதன் உடையவன் அரசனிடம் தெரிவிக்க, பாண்டியன் அவ்விடத்தைச் சோதிக்கச் சொன்னான். மரத்தடியில் மண் வெட்டியால் வெட்டிப் பார்க்க ஒரு சிவலிங்கம் இருப்பது தெரிந்தது. வெட்டும்போது சிவலிங்கத்தின் உச்சியில் வெட்டு விழுந்தது. அப்படி அரசன் மண்ணை விலக்கிட அவன் ஓடிவந்து உண்மை தெரிந்து பணிந்து கோவில் கட்டத்தொடங்கினான். அப்போது பெருமான் ‘ இந்த மரத்தை வெட்டினாலல்லவோ இங்கே கோவில் கட்டமுடியும். அப்படிச் செய்யாதே, நாம் இதன்மேற்கே சிறிது வடக்குச் சரிவாகத் தோன்றுகிறோம். தம்பி யிருப்போம். அங்கே கோவில்கட்டு” என்று அருளி அவ்விடத்தில் நடந்து சென்றிருந்தார். கோவில் அப்படியே கட்டப் பெற்றது. நடந்து சென்ற இலிங்கமானதால் நடமீசனென்றும், மரத்தில் வெட்டுப்பட்டவரானதால் காயமீசர் எனவும் இப்பெருமான் பெயர் பெறுவார். அவ்வெட்டின் அடையாளத்தை இன்றும் காணலாம்.

திருவிழா

இங்கே சித்திரை மாதம் பெருந்திருவிழா நடைபெறும். ஐப்பசி மாதம் திருக்கலியாண விழா நடக்கும். தைப்பூசத்தில் தெப்பத் திருவிழா வரும்.

அருச்சனை

அட்டோத்திரம், திரிசதை, சகஸ்ரநாமம் என்னும் அருச்சனைகள் செய்யப்பெறுகின்றன. இவைகளுக்குக் கட்டணத் திட்டம் அமைக்கப்பெறவில்லை.


அ. சரித்திர வரலாறு.

கல் வெட்டுக்கள் :—

இத்திருக்கோவிலில் கல்வெட்டுக்கள் பதினொன்றுள்ளன. பதினொரு கல் வெட்டுக்கள் கல்வெட்டிலாகாவினரால் 1895ல் எடுக்கப்பட்டு அச்சிடப்பெற்றன.

பாண்டியருடையவும் சோழர்களுடையவும் ஆன கல் வெட்டுக்கள் இவை, கி. பி. 985 — 1011 வரை அரசாண்ட இராசராச சோழனும், கி. பி. 1011—1044 வரை ஆண்ட இராசேந்திர சோழனும், 1074 முதல்

கங்கைகொண்டான் கைலாசநாதர் கோவில்



விவரம்.

1, 14. கர்ப்பக்கிரகம்	9. [illegible]
2, 15. அர்த்தமண்டபம்	12. அக்கினி தீர்த்தம்
3, 16. மகாமண்டபம்	13. [illegible]
4, 28. [illegible]	21 [illegible]
5, 18. நந்தி	22 [illegible]
10, 19. கொடிமரம்	23. [illegible]
11, 20. பலிபீடம்	24. [illegible]
8, 17. சண்டேசர்	25. திருக்கோபுரவாயில்
6. [illegible]	26. [illegible]
7. [illegible]	27. [illegible] கோவில்

பிர்ம்மதேயம
மங்கலத்து ஸ்ரீ
பட்டாரர்க்கு
ாக்கு மூன்றும்,
மூன்றும், நித்
எரிக்க உழக்கு
க ஐம்பது ஆடு
ிக்கப்பட்டதும்
து. வரகுண
தந்தையின்
வல்லபன் என்ப
ணன் தனது தந்
ரால் இவ்வூரை
கோயிலையும்
என்பதை இக்
ால் அறிவி

ராஜன்
வெட்டு

ல்வெட்டு (எண்
லாம் ராஜராஜ
உரியது. இதன்
. 1011. ராஜ
லத்து கீழ் களக்
ர்ம்மதேயம் ஸ்ரீ
லத்து ஸ்ரீ கையி
காயிலில் எழுந்த
ஷத்திர பால தே
பரவர்), கணபதி
(விநாயகர்)
ங்கள் கூறப்பட்
வ்விநாயகரைத்
நில் சேதப்படுத்
போலும்). ராஜ
லத்தில் பாண்டி
சோழர்கள் ஆட்
து. எனவே சோ
ண்டி மண்டலத்
ராஜ மண்டலம்
த்தனர். இப்பெ
ாழர்களது கல்
மட்டுமே கா
ிகேசரி மங்கலம்
இக் கோயிலுக்
மான தேவதா
றப்பட்டுள்ளது.
ன்பது பாண்டிய


...ம் என்றே அழைக்கப்படு...
றது. அரிகேசரிமங்கலத்து குளத்தில் பாசி, பற்றுக் கொண்டு இரண்டு சங்கு ஊதத் ஆணையிடுகிறது.

குலோத்துங்கன் கல்வெட்டு

முதல் குலோத்துங்கனின் கல்வெட்டு (எண்-727) புகழ் மாது விளங்க என்னும் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. இதன் காலம் கி.பி. 1098. ராஜராஜப் பாண்டி நாட்டு முடிகொண்ட சோழ வள நாட்டு கீழ் களக் கூற்றத்து பிர்ம்மதேயம் கங்கை கொண்ட சோழ சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீ கையிலாயம் உடையார்க்கு அளித்த விளக்கும், விளக்கு எரிக்க அளித்த 50 ஆடுகளும் குறிப்பிடப் பட்டுள்ளன. இடப்பெயர்கள் மாறி உள்ளதை நன்கு கவனிக்க வேண்டும். முதலாம் ராஜராஜ சோழன் கி.பி. 985-யிலிருந்து 1014 வரை ஆட்சி புரிந்தான். இவனுடைய மகன் ராஜேந்திரனுக்கு முடிகொண்ட சோழன் என்ற பெயரும் உண்டு. இப் பெயர்களால் நாட்டின் பெயர்கள் அழைக்கப்படுவதைக் கவனிக்க வேண்டும். ராஜேந்திரன் கி.பி. 1023-ல் கங்கை வரை வென்று கங்கை கொண்டான் என்ற பெயர் தரித்தான். இவனது பெண் வயிற்றுப் பேரனே குலோத்துங்க சோழனாவான். இவன் ஸ்ரீ வல்லப மங்கலம் என்னும் ஊரின் பெயரைத் தனது பாட்டனின் சிறப்புப் பெயரால் கங்கை கொண்ட சோழ சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கலானான். இப்பெயரே இன்றுவரை

(10-ம் பக்கம் பார்க்க)

அனைவ(



38. மஹால் ...

குறிப்பு: எங்...

15.8.92

(3)

15.8.92
தினமணி.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கங்கைகொண்டான்...

[illegible] ஊரின் பெயர் கங்கைகொண்டான் என்று [illegible].

சடையவர்மன்
கல்வெட்டு

திருமடந்தையும் ஜெயமடந்தையும் என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியை உடைய சடையவர்மன் ஸ்ரீ வல்லப பாண்டியன் கி.பி. 1101-லிருந்து 1124 வரை ஆட்சி புரிந்தவன். இவனது கல்வெட்டு (எண்-732) பூர்த்தியடையாமல் உள்ளது. இதன் காலம் கி.பி. 1119. [illegible] பெயரால் [illegible] நீக்கப்பட்டுள்ளன. கீழ் களக் கூற்றத்து ஸ்ரீ வல்லப சதுர்வேதி என்று பாண்டியனின் பெயரிலேயே ஊரின் பெயர் உள்ளது. இதனால் பாண்டியர்கள் சோழர்களின் பிடியிலிருந்து ஓரளவு விடுபட்டார்கள் என்பதை அறியலாம்.

மாறவர்மன் ஸ்ரீ வல்லப பாண்டியனின் கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. (எண்கள்-730-731). இவைகளின் காலம் முறையே கி.பி. 1158-1169 ஆகும். சந்தியா தீபத்திற்கு ஆடுகளை அளித்ததை கூறுகின்றன. ஊரின் பெயர் ஸ்ரீ வல்லப மங்கலம் என்றே உள்ளது. பூமலர் திருவும் என்றும் மெய்க்கீர்த்தியை உடைய இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டின் காலம் கி.பி. 1244 மாசி மாதம் ஆகும். கீழ் களக் கூற்றத்து பிரம்மதேசம் ஸ்ரீ வல்லப மங்கலம் என்ற பெயரே காணப்படுகிறது. ஸ்ரீ கைலாயமுடையார்க்கு அளிக்கப்பட்ட நிலங்களின் எல்லைகள், அளவுகள் கொடுக்கப்பட்டுள்ளன (எண்-734).

[illegible]வர்மன் சுந்தரபாண்டியன் என்னும் பிற்காலப் பாண்டியன் கி.பி. 1531 முதல் 1555 வரை ஆட்சி புரிந்தான். கி.பி. 1541-ல் வெட்டப்பட்டுள்ள இவனது கல்வெட்டு (எண்-733) சுவையான செய்தியைத் தருகிறது. திருப்பாப்பூ நயினார் கங்கைக்கு வாயாப்பெருமான் சுந்தரபாண்டிய தேவர் என்று மன்னன் அழைக்கப்படுகிறான். இவன் ஹஸ்த நக்ஷத்திரத்தில் பிறந்தவன். திருநெல்வேலிப் பெருமாள் என்று பெயர் தரித்தவன். கீழ் களக் கூற்றத்து கங்கைகொண்டான் உடையார் ஸ்ரீ கைலாயமுடையார்க்கும் நாச்சியார் ஆனந்தவல்லி நாச்சியார்க்கும் அர்த்தசாமத்து பள்ளியறை எழுந்தருளும்போது திருஅமுது படைக்க நிலம் கொடுத்தது கூறப்பட்டுள்ளது. அடுத்த கல்வெட்டும் இதே மன்னனுக்கு உரியது. (எண் - 735) இதன் காலம் கி.பி. 1555. ரணரங்கராம நல்லூரின் துர்க்கை அம்மன் கோயிலுக்கு அளித்த நிலங்கள் கூறப்பட்டுள்ளன.

வரகுணபாண்டியன் கி.பி. 870-ல் தனது தந்தையின் பெயரால் ஸ்ரீ வல்லப மங்கலம் என்னும் இவ்வூரை ஏற்படுத்து ஸ்ரீ கைலாயக் கோயிலைக் கட்டினான். சோழர்கள் காலத்தில் பாண்டி மண்டலம் ராஜராஜ பாண்டி நாடு என்று பெயர் மாற்றம் அடைந்தது. முதற் குலோத்துங்கன் காலத்தில் ஊரின் பெயர் ராஜேந்திர சோழனின் நினைவாகக் கங்கைகொண்ட சோழ சதுர்வேதி மங்கலம் என்று மாறிற்று. இடைக்கால பாண்டியர்களின் காலத்தில் ஸ்ரீ வல்லப மங்கலம் என்று பழைய பெயரால் அழைத்தனர். பிற்காலப் பாண்டியர் காலத்தில் மீண்டும் கங்கை கொண்டான் என்று அழைக்கப்பட்டது. ஆனால் எந்த அரசனும் கோயிலுக்கு உரிய ஸ்ரீ கைலாயம் என்னும் பெயரை மாற்றவில்லை.

கோயிலில் உள்ள அம்மனுக்கு நான்கு கைகள் உள்ளன. பொதுவாக, கோயில்களில் கருங்கல்லால் செய்யப்பட்ட அம்மன் சிலைகளைப் பிரதிஷ்டை செய்யும் வழக்கம் முதல் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி.பி. 1070-1122) ஏற்பட்டது. சோழ நாட்டில் அம்மன் சிலைக்கு நான்கு கைகள் இருக்கும். அங்கயற்கண்ணியான ஸ்ரீ மீனாக்ஷி அவதரித்த பாண்டிநாட்டுக் கோயில்களில் அம்மன் சிலைக்கு இரண்டு கைகள்தான் இருக்கும். ஆனால் கங்கைகொண்டான் கோயிலின் அம்மன் சிலைக்கு நான்கு கைகள் உள்ளன. ஒருவேளை இந்த முதல் குலோத்துங்க சோழன் பிரதிஷ்டை செய்திருப்பானோ என்று தோன்றியது. ஆனால் கலை அம்சம் பிற்காலத்தைச் சேர்ந்ததாய் இருந்தது. சிவாச்சாரியார் கர்ப்பக்கிரகத்தின் இருட்டில் இருந்த வேறு ஒரு சிலையைக் காட்டினார். அதற்கு நான்கு கைகள் உள்ளன. இது குலோத்துங்கன் காலத்துச் சிலை என்பதில் ஐயமில்லை. [illegible] இல் இதில் சிறு [illegible] ஏற்பட்டதால் நான் [illegible]ருடன் கூடிய புதிய சிலையைப் பிர[illegible] செய்தனர். அ[illegible] ஆனந்தவல்லி என்று [illegible]தனர். அச் சிலை[illegible] சமீபத்தில் இ[illegible] உடைத்தனர்.

நம்முன்னோர் அளித்துச் சென்ற [illegible] சின்னங்[illegible] கலைச்செல்வங்களை[illegible] காப்பது நம் கடமை[illegible] ளைக்காரன் நமது [illegible] ளைக் காப்பாற்றின[illegible] கைகொண்டான் [illegible] கல்வெட்டுகள் ஜெ[illegible] சத்துப் பேராசிரியர் [illegible] என்பவரால்தான் [illegible]தன. அவைகளை [illegible] அதிகாரி உல்கோர் [illegible] யப்படுத்தினான். [illegible]ருக்கு இருந்த [illegible] பற்று நமக்கும் இரு[illegible]டும்.

— [illegible]
என்.சே[illegible]

எந்நாளோ?

அடிமை விலங்கை ஒழித்தே தான்
அரிய சுதந்திரம் பெற்றாலும்
குடிக ளெல்லாம் குறைவின்றிக்
கூடி வாழக் காணோமே?

இன்பம் காண்பார் ஒருபுறமும்
இன்ன லுறுவார் மறுபுறமும்
கண்முன் காட்சி யளிகின்ற
கடைநிலை மாறக் காணோமே?

உணவு இல்லை, உடையில்லை?
உறையச் சிறிதும் இடமில்லை?
எனவே குமுறும் ஏழையெல்லாம்
இன்பம் காண்ப தெந்நாளோ?

—எஸ்.சங்கரநாரா[illegible]

சுதந்திர இந்தியாவில் கல்வி

[illegible] நாடு [illegible]
[illegible] காட்ட
[illegible]
[illegible] வணக்கம் கூறி:

[illegible]
[illegible]